கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 125/2006

வாதியின்/பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு,P,பிரபு,இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------------------------

| | |
|---|---|
| பெயர் சுப்பிரமணி(பி.வா.சா.1) | சாதி |
| த/பெ.க/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---------.------------------------------------------------------------------------

28.02.23.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். அ.வ.எண்.47/2015ல் வாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து அதில் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

i) அ.வ.எண்.47/2015 வழக்கில் பிராதுடன் தாக்கல் செய்த பிராது வரைபடம் அசல் பி.**வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ii) 21.11.1933ம் தேதியிட்ட முத்துக்கருப்ப ஏகாலிக்கு , சுப்பையன் ஏகாலி எழுதிக்கொடுத்த அடைமான வட்டிக்கடன் பத்திரம் அசல் - **பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

iii) 07.12.1934ம் தேதியிட்ட கருப்பண ஏகாலிக்கு , சுப்பையன் ஏகாலி எழுதிக்கொடுத்த அடைமான கடன் பத்திரம் அசல் - -

**பி.வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

iv) 06.09.1998ம் தேதியிட்ட எனக்கு, எனது தந்தை மாரியப்பன் எழுதிக்கொடுத்த உயில்சாசனம் அசல் **-பி.வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

v) 19.07.2006ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை நகரம் வார்டு-டி, பிளாக்-2, டவுண் சர்வே எண். 106/1,2 மற்றும் 115/2 சம்பந்தப்பட்ட புலவரைபடம் உண்மை நகல் **- பி.வா.சா.ஆ.5-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

vi) 19.07.2006ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை நகரம் வார்டு-டி, பிளாக்-2, டவுண் சர்வே எண். 106/2 சம்பந்தப்பட்ட அ பதிவேடு உண்மை நகல் **- பி.வா.சா.ஆ.6-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

vii) 29.01.2015ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை நகரம் வார்டு-டி, பிளாக்-2, டவுண் சர்வே எண். 115/2 சம்பந்தப்பட்ட அ பதிவேடு உண்மை நகல் **- பி.வா.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்யவேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**